**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 24/2017**

**Deposition of Witnesses for PW3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ராஜேந்திரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 11.08.2025

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி ஈ.சி.ஆர் நெடுஞ்சாலை பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் தேதி கேணிக்கரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 15.08.2015ம் தேதி 12.30 மணிக்கு கேணிக்கரை காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் காவல் ஆய்வாளருடன் சிறப்பு சார்பு ஆய்வாளர் முத்துராமலிங்கம், த.கா.அருணகிரிநாதன், ஆகியோருடன் நான் வாழாந்தரவை கிராமம் மாரியம்மன் கோவில் அருகில் போதை பொருள் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது அங்கு சந்தேகபடியாக நின்றுக்கொண்டிருந்த ஒரு பெண், 2 ஆண்கள் போலீஸ் பார்ட்டியாகிய கண்டதும் ஓட எத்தணித்தவர்களில் ஒரு ஆண் பிடித்து விசாரித்தபோது தன்னுடைய பெயர் ராஜா என்றும் தன்னுடன் நின்று தப்பி ஓடியவர் கார்த்திக் என்றும், தப்பி ஓடிய பெண் சுரேஷ் மனைவி செல்வராணி என்று சொன்னார். மேற்படி எங்கள் முன்னிலையில் ராஜா ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சாட்சிகளாக திருமூர்த்தி, அருணகிரியும் கையெழுத்து செய்தனர். ராஜா சோதனை செய்ய சோதனை ஜாபிதாவில் கையெழுத்து செய்தார். அதன் பேரில் அவரை சோதனை செய்தபோது

அருகிலுள்ள வேலி கருவைக்கு பின்னால் கஞ்சாவை மறைத்து வைத்திருப்பதாக தெரிவித்தன்பேரில் அங்கு நின்ற டி.என்.65 S 7543 என்ற பிளாட்டினம் பைக்கில் வைத்திருந்த கட்டைப்பையில் 1.500கிகி கஞ்சவை எவ்வித அரசு அனுமதி இல்லாமல் தீங்கு விளைவிக்க கூடிய கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக சாட்சிகள் முன்னிலையில் 13.45 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியும், 1.500 கிகி கஞ்சாவிலிருந்து 5 கிராம் வீதம் 4 பாக்கெட்டுகள் மொத்தம் 20 கிராம் கஞ்சாவை மாதிரிக்காக சேதாரம் செய்து, அதே இடத்தில் SHO சீல் வைத்தும், எதிரி மற்றும் சொத்துகளுடன் 15.00 மணிக்கு நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கு சம்பந்தமாக நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என்னால் எந்த ஆவணங்களும் தயாரிக்கவும் இல்லை, எழுதப்படவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை யார் எழுதினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. திருமூர்த்தி, அருணகிரியும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரித்தபோது தராசு கொண்டு சென்றதாகவும், எடை போட்டதாகவும் சொல்லியுள்ளேன். நாங்கள் ஆவணங்களில் எந்த வாகனத்தில் சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும், ஆய்வாளருடன் ரைடுக்கு செல்லவில்லை என்றும், எதிரிகளிடம் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. இரண்டு எதிரிகள் தப்பிய ஓடியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்வது பொய் என்றும், உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் சாட்சிகள் கையெழுத்தாக சொல்வது பொய் என்றும் தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை என்றால்

சரியல்ல. எதிரி வீட்டில் இருந்த நபரை விசாரணை என்ற பெயரில் காவல் நிலையம் அழைத்து சென்று பொய்யாக இந்த வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

**இல்லை.**

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.